




திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (21.01.2025) மாலை, சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற ‘சிவகங்கை மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு’ நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

### காரைக்குடியில் — அரசு

# ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## “மாணவிகள் நன்றாகப் படித்து – வாழ்வில் சிறப்பான நிலையினை அடைய வேண்டும்” என்று வாழ்த்தினார்!

காரைக்குடி, ஜன.23-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வி உதவித் தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுய தொழில் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காரைக்குடி, முடியரசன் சாலையிலுள்ள அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் மாலை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இவ்விடுதியில் 62 பள்ளி மாணவிகள் தங்கியுள்ளனர்.

முதலமைச்சர் அவர்கள், அம்மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், அம்மாணவிகளை நன்றாக படித்து, வாழ்வில் சிறப்பான நிலையினை அடைய வேண்டும் என்று வாழ்த்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2025) காரைக்குடி, அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, விடுதியில் உள்ள சமையல் கூடம், உணவுக் கூடம், இருப்பு அறை ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாணவிகளுக்கு இரவு உணவாக வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட இட்லி, சாம்பார், சட்னி ஆகியவற்றை ருசித்து பார்த்து அதன் தரத்தினை ஆய்வு செய்தார்.

பின்னர், விடுதி அலுவலர்களிடம், மாணவிகளுக்கு தரமான மற்றும் சத்தான உணவினை குறித்த நேரத்தில் தவறாமல் வழங்கிட வேண்டும் என்றும், அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், மாலை நேரங்களில் மாணவிகளுக்கு விடுதி காப்பாளர்கள் பாடங்கள் கற்றுத் தருவது பாராட்டுக்குரியது என்றும், பள்ளி பாடத்துடன் பொது அறிவு தகவல்களையும் மாணவிகளுக்கு கற்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2025) காரைக்குடி, அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்த போது, மாணவிகளுக்கு இரவு உணவு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட இட்லி, சாம்பார், சட்னி ஆகியவற்றை ருசிபார்த்து அதன் தரத்தினை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருவண்ணாமலையில் மண் சரிவில் பாதிக்கப்பட்ட

# 20 குடும்பங்களுக்கு தற்காலிக வீடு!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

திருவண்ணாமலை, ஜன.23-

திருவண்ணாமலையில் மண் சரிவில் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். திருவண்ணாமலையில் பெஞ்சல் புயல் மழையால் தீபமலை அடிவாரம் வ.உ.சி. நகர் 11வது தெருவில் மண் சரிவு ஏற்பட்டு 7 பேர் உயிரிழந்தனர். பல வீடுகள் இடிந்து சேதமடைந்தது. வீடுகளை இழந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தற்காலிக வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, திருவண்ணாமலை அடுத்த நல்லவன் பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட சமுத்திரம் பகுதியில் 20 குடும்பங்களுக்கான தற்காலிக குடியிருப்பு, அமைச்சர் எ.வ.வேலுவுக்கு சொந்தமான அறக்கட்டளை சார்பில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து கட்டப்பட்டது.

அதனை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் திறந்து வைத்து, சம்பந்தப்பட்ட குடும்பத்தினரிடம் வீட்டு சாவியை ஒப்படைத்தார். பின்னர் அமைச்சர் எ.வ. வேலு கூறுகையில், முதல்வரின் உத்தரவுபடி, பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக வாடகை வீடுகளில் தங்க வைக்கப்பட்டு தேவையான வசதிகள் அரசு சார்பில் செய்யப்பட்டது. தற்போது நல்லவன் பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட சமுத்திரம் பகுதியில் வருவாய்த்துறைக்கு சொந்தமான இந்த இடத்தை கலெக்டர் மூலம் தேர்வு செய்து, தற்காலிகமாக 20 வீடுகள் அமைக்கப்பட்டு தேவையான அடிப்படை வசதிகளுடன் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.



உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் அழகப்பா பாலிடெக்னிக் கல்லூரி, காரைக்குடியில், மாணவர் உதவி மையம், மாணவர் தங்கும் அறை, உணவு விடுதியினை ஆய்வு மேற்கொண்டார்.

### டெல்லியில் கடும் பனிமூட்டம்

# விமான சேவை பாதிப்பு!

புதுடெல்லி, ஜன.23-

தலைநகர் டெல்லியில் கடந்த சில நாட்களாக கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. பனிமூட்டம் காரணமாக டெல்லியில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது. கடும் பனி மூட்டம், போதிய வெளிச்சமின்மை காரணமாக டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் இன்று காலை பல விமானங்கள் தாமதமாக வந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால், பயணிகள் பெரும் அவதியடைந்தனர்.

டெல்லி சர்வதேச விமான நிலையம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், புதுப்பிக்கப்பட்ட விமான தகவல்களுக்கு சம்பந்தப்பட்ட விமான நிறுவனத்தை தொடர்பு கொள்ளுமாறு பயணிகள் கேட்டு கொள்ளப்படுகிறார்கள். ஏதேனும் அசவுகரியம் ஏற்பட்டால் அதற்காக வருந்துகிறோம் என்று தெரிவித்துள்ளது. டெல்லியில் பனிமூட்டம் தொடர்ந்து அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் டெல்லியில் குறைந்தபட்ச வெப்பநிலை 11°செல்சியசாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு தெற்கு மாவட்டம் கருங்கல்பாளையம் பகுதி 50வது வார்டு மாமன்ற உறுப்பினரும் ஈரோடு மாவட்ட திட்டக்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் இரா.ரமேஷ்குமார் ஏற்பாட்டில் 100 க்கும் மேற்பட்ட பெண்கள் வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலையில், திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை உறுப்பினராக இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.